**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், மார்கழி மாதம் 3 ம் நாள்

2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம் நாள் வியாழக்கிழமை

**<u>இடைக்கால மனு எண்.3/2025</u>**

**in**

**<u>அசல் வழக்கு எண். 56/2025</u>**

S. ரோமித் சர்மா ... **மனுதாரர் / வாதி**

//எதிர்//

1. S. வேலுசாமி

2. V. மேகநாதன் ... **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சண்முகநந்தன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.மகேசன், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தைப் பார்வையிட்டு, தகுதிவாய்ந்த புகைப்படக் கலைஞருடன் சேர்ந்து, அதன் பௌதீக அமைப்பை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

1.1). கடந்த 10.01.2018 அன்று மனுதாரர்/வாதியின் தந்தை சதிஷ் சர்மா அவர்கள், நாராயணசாமி என்பவரிடமிருந்து மனுவில் குறிப்பிடப்பட்ட சொத்தையும் மற்ற சொத்துக்களையும் கிரையம் பெற்றார். சதிஷ் சர்மா அந்தச் சொத்தை சுவாதீனத்திலும், அனுபவத்திலும் வைத்திருந்து வருவாய்த் துறை ஆவணங்களில் அவரது பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் அவர் 20.10.2023 அன்று உயில் எழுதாமல் மனுதாரர், மனுதாரரின் தாயார் அனிதா சர்மா மற்றும் மனுதாரரின் சகோதரர் ரச்சித் சர்மா ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். அதைத் தொடர்ந்து, வருவாய்த் துறை ஆவணங்கள் மனுதாரர், மனுதாரரின் தாயார், மற்றும் மனுதாரரின் சகோதரர் பெயர்களில் மாற்றப்பட்டன.

1.2). மேற்படி சொத்திலிருந்து, மனுதாரர், மனுதாரரின் தாயார் மற்றும் மனுதாரரின் சகோதரர் கூட்டாக, 21.11.2024 தேதியிட்ட விற்பனைப் பத்திரத்தின் கீழ் 9.42 ஏக்கர் நிலத்தை பிரபு மற்றும் தங்கராசு ஆகியோருக்கு விற்றுவிட்டனர். மீதமுள்ள 54 சென்ட் நிலம் மனுதாரர் வசத்திலும், மனுதாரரின் தாயார் மற்றும் சகோதரர் வசத்திலும் அனுபவத்தில் உள்ளது. மேலும், அந்தச் சொத்து வரப்பட்டி கிராமத்தில் க.ச.எண்.27/2B2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

1.3). மேலும், எதிர்மனுதாரர்கள் மற்றும் மனுதாரர் சர்வே எண் 27/3A மற்றும் 23-ல் தென்கிழக்கு பக்கத்தில் உள்ள அண்டை நில உரிமையாளர்கள் ஆவர். மனுவில் குறிப்பிடப்பட்ட சொத்தின் தென்கிழக்கு பக்கத்தில், எதிர்மனுதாரர்களுக்கு ஒரு சொத்து உள்ளது. எதிர்மனுதாரர்கள் தந்தை மற்றும் மகன் ஆவார்கள். மனுதாரருக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் இடையிலான சொத்துக்களுக்கு இடையே வேலி இல்லை. மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்ட சொத்திலிருந்து சுமார் 20 கி.மீ தொலைவில் கோயம்புத்தூரில் வசித்து வருகிறார். மனுதாரரின் தாயார் அனிதா ஷர்மா மற்றும் சகோதரர் ரச்சித் ஷர்மா ஆகியோர் இந்தியாவிற்கு வெளியே வசித்து வருகின்றனர். இதை சாதகமாகப் பயன்படுத்தி எதிர்மனுதாரர்கள், மனுவில்

குறிப்பிடப்பட்ட சொத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமிக்க முயற்சிக்கின்றனர். 22.4.2025 அன்று மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்ட சொத்திற்குச் சென்றபோது, எதிர்மனுதாரர்கள் ஒன்று சேர்ந்து, மனுவில் குறிப்பிடப்பட்ட சொத்தில் மனுதாரரின் அமைதியான உடைமை மற்றும் அனுபவத்திற்கு இடையூறு விளைவித்தனர். அவ்வாறு செய்ய எதிர்மனுதாரர்களுக்கு உரிமை இல்லை. மனுவில் குறிப்பிடப்பட்ட சொத்தின் உடைமை மற்றும் அனுபவத்திற்கான மனுதாரரின் உரிமையையும், மனுதாரரின் தாயார் மற்றும் சகோதரரின் உரிமைகளையும் பாதுகாக்க, இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை எதிர்மனுதாரர்கள் எதிருரையாக ஏற்று தாக்கல் செய்ததின் சுருக்கம் :**

2.1). மனுதாரர் தாக்கல் செய்த மனுவானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. வாதியின் தகப்பனார் சதீஸ்சர்மா என்பவர் தாவா சொத்தினை ஒரு நாராயணசாமி என்பவரிடமிருந்து கடந்த 10.1.2018 ஆம் தேதியன்று தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்பட்ட மோசடியான ஆவணங்களாகும். மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் வாதி வழக்கில் எவ்வித பரிகாரம் கோர தகுதியற்றவர். மேலும் சதீஸ் சர்மா என்பவரின் இறப்பிற்கு பிறகு அவரது வாரிசாக வாதி, அவரது மற்ற வாரிசுகளை விட்டுவிட்டு அவர்களின் அனுமதி இன்றி தாக்கல் செய்துள்ள வழக்கானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல.

2.2). வாதியோ அவரது குடும்பத்தினரோ தாவாசொத்தில் என்றுமே சுவாதீனத்தில் இருந்தது கிடையாது. மேற்படி வாதி அவரது மோசடியான ஆவணங்களின் அடிப்படையில் தாவாசொத்து குறித்து வருவாய்த்துறை ஆவணங்களில் அவர்களது செல்வாக்கினை பயன்படுத்தி பட்டா பெயர் மாற்றம் செய்து கொண்டு உள்ளார்கள். மேலும் பட்டா ஆவணம் உரிமை மூல ஆவணமாக கருத இயலாது என்பது சட்ட நியதியாகும். பிரதிவாதிகள் மற்றும் அவரது முன்னோர்கள் தாவாசொத்தினை சுமார் 80 வருடங்களுக்கு மேலாக அனுபவித்துக்

கொண்டு வருகிறார்கள். மேலும் தாவாசொத்தை ஒட்டியும் பிரதிவாதிகளுக்கு க.ச.எண்.27/2, 27/3 ஏ மற்றும் 23 ஆகியவற்றிலும் பூமி உள்ளது. மேற்படி வாதியோ அவரது குடும்பத்தினரோ எந்த காலத்திலும் தாவாசொத்தில் சுவாதீனத்தில் இருந்தது கிடையாது.

2.3). வாதியின் தகப்பனார் சதீஸ் சர்மாவிற்கு பூமியை விற்பனை செய்த நாராயணசாமி என்பவர், அவர் க.ச.எண்.27/2 நம்பர் காலையில் அதன் முந்தைய உரிமையாளர்களுக்கு 1.84 ஏக்கர் பூமி மட்டும் பாத்தியம் உள்ள நிலையில் அவர்களிடமிருந்து 1.38 ஏக்கர் பூமியை அதிகமாக சேர்த்து 3.22 ஏக்கர் பூமியை மோசடி எண்ணத்துடன் உரிய ஆவணங்கள் இன்றி கிரையம் பெற்றுள்ளார். மேற்படி நாராயணசாமி கிரைய பத்திரத்தில் க.ச. எண் 27/2 நெம்பர் காலையில் மொத்தம் 1.84 ஏக்கர் பூமி மட்டுமே முந்தைய ஆவணங்களில் குறிப்பிட்ட நிலையில் நாராயணசாமி இவ்வாறாக அதிகப்படியான பூமி குறித்து ஏற்படுத்திய கிரைய ஆவணமே சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. இந்த நிலையில் 3.22 ஏக்கர் அதிகமாக குறிப்பிட்டு கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொண்ட நாராயணசாமி க.ச.எண்.27/2 நம்பர் காலையில் 3.76 ஏக்கர் பூமியை அதாவது 54 சென்ட் பூமியை அதிகமாக குறிப்பிட்டு கடந்த 10.01.2018 தேதியன்று வாதியின் தகப்பனார் சதீஸ்சர்மாவிற்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். இவ்வாறு அதிகமாக குறிப்பிட்ட 54 சென்ட் பூமியை தான் வாதி தாவா சொத்தாக இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ளார்.

2.4). மேலும் ஷை நாராயணசாமி வாதியின் தகப்பனாருக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணத்தில் பிரதிவாதிகள் 80 வருடங்கள் மேலாக அனுபவித்து வந்த தாவா சொத்துகளையும் சேர்த்து மோசடியாக கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். தாவா சொத்தானது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமியாகும். பிரதிவாதிகள் தான் தாவா சொத்துக்களை யாருடைய இடையூறும் இன்றி இந்நாள் வரையிலும் அனுபவித்து வருகிறார்கள்.

2.5). மேலும் வாதி, அவர் தாயார், சகோதரர் ஆகியோர் பிரபு மற்றும் தங்கராசு ஆகியோருக்கு 21.11.2024-ம் தேதியில் ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணத்தில் கடந்த 29.3.2010 ஆம் தேதியிட்ட பிரதிவாதிகள் மற்றும் சிலர் அடி நிலம் நீங்கலாக ஏற்படுத்திய தடப்பாத்திய ஒப்பந்த பத்திரத்தில் கண்டுள்ள தடத்தினையும் சேர்த்து விற்பனை செய்து விட்டார்கள். எனவே மேற்படி வாதிக்கு தாவா சொத்திலோ அல்லது தாவா சொத்திற்கு செல்லும் தடத்திலோ எந்த உரிமையும் கிடையாது. மேலும் தாவா சொத்தினை மேற்படி பிரதிவாதிகள் தான் சுமார் 80 வருடங்களுக்கு மேலாக விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார்கள். மேலும் வாதி தாவா சொத்துகளின் பௌதீக அமைப்பினை காட்ட தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரும் மனுவும் சட்டப்படி நிலைக்க தக்கதல்ல.

2.6). ஏற்கனவே வாதி மற்றும் அவரது குடும்பத்தினர் ஒரு பிரபு மற்றும் தங்கராசு ஆகியோருக்கு க.ச.எண்.27/2 நம்பர் காலையில் பூமியை விற்பனை செய்த பிறகு மேற்படி இருவரும் அவர்கள் விலைக்கு வாங்கிய பூமியை சுற்றிலும் கம்பிவேலி அமைத்துள்ளார்கள். மேலும் மேற்கண்ட தாவா சொத்துக்கள் வாதியின் குடும்பத்தினருக்கு பாத்திப்பட்டதில்லை என்பதை நன்கு தெரிந்து தான் மேற்படியார்கள் தாவா சொத்துக்களை கிரையம் பெறவில்லை. மேலும் வாதிக்கு உரிமையில்லாத சொத்தில் வாதி நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் வாதி தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரும் மனுவும் சட்டப்படி ஏற்கத்தக்கது அல்ல. எனவே மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3.** இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு எழுவினாக்கள் வனைவதற்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்/வாதி இம்மனுவை தாக்கல் செய்து, நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரியுள்ளார். இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்வு காண வேண்டியதாகும்.

5.1). வழக்கு கோப்பு மற்றும் இம்மனுவை இந்நீதிமன்றம் பரிசீலித்ததில் பிரதிவாதிகள், அவர்களது ஆட்கள் மற்றும் முகவர்கள், வாதி தாவா சொத்தை அமைதியாக வைத்திருப்பதற்கும் அனுபவிப்பதற்கும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

5.2). மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்கள் மற்றும் மனுதாரர் சர்வே எண் 27/3A மற்றும் 23-ல் தென்கிழக்கு பக்கத்தில் உள்ள அண்டை நில உரிமையாளர்கள் என்றும், மனுவில் குறிப்பிடப்பட்ட சொத்தின் தென்கிழக்கு பக்கத்தில், எதிர்மனுதாரர்களுக்கு ஒரு சொத்து உள்ளது என்றும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் இடையிலான சொத்துக்களுக்கு இடையே வேலி இல்லை என்றும், மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்ட சொத்திலிருந்து சுமார் 20 கி.மீ தொலைவில் வசித்து வருகிறார் என்றும், மனுதாரரின் தாயார் மற்றும் சகோதரர் இந்தியாவிற்கு வெளியே வசித்து வருகின்றனர் என்றும், மனுவில் குறிப்பிடப்பட்ட சொத்தில் மனுதாரர் இல்லாததைப் பயன்படுத்தி, எதிர்மனுதாரர்கள், மனு சொத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமிக்க முயற்சிக்கின்றனர் என்றும், 22.4.2025 அன்று மனுதாரர் மனு சொத்திற்குச் சென்றபோது, எதிர்மனுதாரர்கள் ஒன்று சேர்ந்து, மனு சொத்தில் மனுதாரரின் அமைதியான உடைமை மற்றும் அனுபவத்திற்கு இடையூறு செய்தனர் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

5.3). எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிக்கு தாவா சொத்திலோ அல்லது தாவா சொத்திற்கு செல்லும் தடத்திலோ எந்த உரிமையும் கிடையாது. மேலும் தாவா சொத்தினை மேற்படி பிரதிவாதிகள் தான் சுமார் 80 வருடங்களுக்கு மேலாக விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார்கள். நாராயணசாமி கிரைய பத்திரத்தில் க.ச. எண் 27/2 நெம்பர் காலையில் மொத்தம் 1.84 ஏக்கர் பூமி மட்டுமே முந்தைய ஆவணங்களில் குறிப்பிட்ட நிலையில் நாராயணசாமி இவ்வாறாக அதிகப்படியான பூமி குறித்து ஏற்படுத்திய கிரைய ஆவணமே சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. இந்த நிலையில் 3.22 அதிகமாக குறிப்பிட்டு கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொண்ட நாராயணசாமி க.ச.எண்.27/2 நம்பர் காலையில் 3.76 ஏக்கர் பூமியை அதாவது 54 சென்ட் பூமியை அதிகமாக குறிப்பிட்டு கடந்த 10.1.2018 தேதியன்று வாதியின் தகப்பனார் சதீஸ்சர்மாவிற்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். இவ்வாறு அதிகமாக குறிப்பிட்ட 54 சென்ட் பூமியை தான் வாதி தாவா சொத்தாக இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ளார்.

5.4). மேலும் வாதி, அவர் தாயார், சகோதரர் ஆகியோர் பிரபு மற்றும் தங்கராசு ஆகியோருக்கு 21.11.2024-ம் தேதியில் ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணத்தில் கடந்த 29.3.2010 ஆம் தேதியிட்ட பிரதிவாதிகள் மற்றும் சிலர் அடி நிலம் நீங்கலாக ஏற்படுத்திய தடப்பாத்திய ஒப்பந்த பத்திரத்தில் கண்டுள்ள தடத்தினையும் சேர்த்து விற்பனை செய்து விட்டார்கள். தற்போதும் விவசாய பயிர்களை பயிரிட்டு வருகிறார்கள் மேற்படி விவரங்களை நன்கு தெரிந்தும் வாதி வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என சொல்லப்பட்டுள்ளது.

5.5). இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதை பரிசீலனை செய்கையில் வாதியின் தகப்பனார் சதீஸ் சர்மாவிற்கு பூமியை விற்பனை செய்த நாராயணசாமி என்பவர், அவர் க.ச.எண்.27/2 நம்பர் காலையில் அதன் முந்தைய உரிமையாளர்களுக்கு 1.84 ஏக்கர் பூமி மட்டும் பாத்தியம் உள்ள நிலையில் அவர்களிடமிருந்து 1.38 ஏக்கர் பூமியை அதிகமாக சேர்த்து 3.22 ஏக்கர் பூமியை மோசடி

எண்ணத்துடன் உரிய ஆவணங்கள் இன்றி கிரையம் பெற்றுள்ளார் என்பது குறித்தும், மேற்படி நாராயணசாமி கிரைய பத்திரத்தில் க.ச. எண் 27/2 நெம்பர் காலையில் மொத்தம் 1.84 ஏக்கர் பூமி மட்டுமே முந்தைய ஆவணங்களில் குறிப்பிட்ட நிலையில் நாராயணசாமி இவ்வாறாக அதிகப்படியான பூமி குறித்து ஏற்படுத்திய கிரைய ஆவணமே சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. இந்த நிலையில் 3.22 ஏக்கர் அதிகமாக குறிப்பிட்டு கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொண்ட நாராயணசாமி க.ச.எண்.27/2 நம்பர் காலையில் 3.76 ஏக்கர் பூமியை அதாவது 54 சென்ட் பூமியை அதிகமாக குறிப்பிட்டு கடந்த 10.1.2018 தேதியன்று வாதியின் தகப்பனார் சதீஸ்சர்மாவிற்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பது குறித்தும் இந்த மனுவில் தீர்வுகாண இயலாது. அசல் வழ்கு விசாரணை முடிவில் தான் தீர்வுகாண இயலும்.

5.6). வாதி, அவர் தாயார், சகோதரர் ஆகியோர் பிரபு மற்றும் தங்கராசு ஆகியோருக்கு 21.11.2024-ம் தேதியில் ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணத்தில் கடந்த 29.3.2010 ஆம் தேதியிட்ட பிரதிவாதிகள் மற்றும் சிலர் அடி நிலம் நீங்கலாக ஏற்படுத்திய தடப்பாத்திய ஒப்பந்த பத்திரத்தில் கண்டுள்ள தடத்தினையும் சேர்த்து விற்பனை செய்து விட்டார்கள் என்பது குறித்து அசல் வழக்கு விசாரணையின் முடிவில்தான் தீர்வு காண இயலும். தற்போது இந்த மனுவில் தீர்வுகாண இயலாது.

5.7). அசல் வழக்கு பரிகாரம் குறித்து தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிருபணம் செய்ய வேண்டுமே தவிர, நீதிமன்ற ஆணையர் நியமனம் கோருவது ஏற்புடையதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய இவ்வழக்கில் வாதி அவரது வழக்கை ஆவணங்கள் மூலமாகத்தான் நிரூபிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர்/வாதியின் இந்த மனு வழக்கு சொத்தின் சுவாதீனம் குறித்து சாட்சியங்களை திரட்டுவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கிற்கு சாட்சியங்களை திரட்டுவதற்காக நீதிமன்ற

ஆணையர் நியமனம் கோருவது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, நீதியின் நலன் கருதி இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**தூலூர்.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**தூலூர்.**

Draft/Fair order
IA.No.3/2025 in
OS.56/2025 in
Dated:18.12.2025
DMC, Sulur.